**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 606** **நாள்: 24.10.2026**

**வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, மணலி மண்டலத்தில் ஆமுல்லவாயல் பாலம் பகுதியில் புழல் உபரிநீர் கால்வாயில் ஆகாயத்தாமரைகள் அகற்றும் பணிகள், ட்ரோன் மூலம் கண்காணிப்பு நடவடிக்கைகள், கட்டுப்பாட்டு அறை, வெள்ள நிவாரண மையம் மற்றும் சடையன் குப்பம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, மணலி மண்டலத்தில் ஆமுல்லவாயல் பாலம் பகுதியில் புழல் உபரிநீர் கால்வாயில் ஆகாயத்தாமரைகள் அகற்றும் பணிகள், ட்ரோன் மூலம் கண்காணிப்பு நடவடிக்கைகள், கட்டுப்பாட்டு அறை, வெள்ள நிவாரண மையம் மற்றும் சடையன் குப்பம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (24.10.2026) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாநகராட்சி ஆணையாளர் அவர்கள், மணலி மண்டலம், வார்டு-18க்குட்பட்ட ஆமுல்லாவாயல் பாலம் பகுதியில் உள்ள புழல் உபரிநீர் கால்வாயில் நீர் சீராகச் செல்லும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆகாயத்தாமரைகள் அகற்றுதல், வண்டல்கள் தூர்வாருதல் பணிகளைப் பார்வையிட்டு, ட்ரோன் மூலம் இந்தப் பணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதை ஆய்வு செய்தார்.

பின்னர், இப்பகுதியில் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ள மைய சமையல் கூடத்தினைப் பார்வையிட்டு, அங்கு சமைப்பதற்குத் தேவையான உணவுப் பொருட்களின் இருப்பு குறித்து ஆய்வு செய்தார். தொடர்ந்து, அங்கு அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையில், மணலி மண்டலத்தில் உள்ள தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழை நீர்த்தேக்கம், கால்வாய்கள் மற்றும் டிரோன் மூலம் மேற்கொள்ளப்படும் கண்காணிப்புப் பணிகள் உள்ளிட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளைப் பார்வையிட்டு, பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் புகார்களின் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

தொடர்ச்சியாக, வார்டு-19, மாத்தூர் (எம்.எம்.டி.ஏ.) 57ஆவது தெருவில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமினைப் பார்வையிட்டு, பொதுமக்களுக்குத் தேவையான பாய், தலையணை, போர்வை, மருந்து மாத்திரைகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதை ஆய்வு செய்தார்.

பின்னர், வார்டு-16ல் மழைநீர் தேங்கும் தாழ்வான பகுதியான சடையான் குப்பம், இருளர் காலனி பகுதியில், புழல் உபரிநீர் கால்வாய் பகுதி மற்றும் குடியிருப்புப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து,

தொடர்ந்து கண்காணித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து, அப்பகுதியில் உள்ள பொதுமக்களிடம் கலந்துரையாடி மழையின் போது மேற்கொள்ளப்படும் மீட்பு நடவடிக்கைகளுக்கு மாநகராட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிட கேட்டுக் கொண்டார்.

மணலி மண்டலத்தில் தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களை மீட்டு தங்கவைப்பதற்காக 17 நிவாரண மையங்கள், 8 மைய சமையல் கூடங்கள் மற்றும் சமையலறைகள் தயார்நிலையில் உள்ளது.

மேலும், மழைநீர் தேங்கும் எடையன்சாவடி, குளக்கரை, ஆர்.எல்.நகர், வடிவுடையம்மன் நகர், அரியலூர், பெரியார் நகர், எஸ்.ஆர்.எப்., பொன்னியம்மன் கோயில் தெரு, காமராஜர் நகர் மற்றும் புதிய புவனேஷ்வரி நகர் உள்ளிட்ட 9 இடங்களில் 100 எச்.பி. திறன் கொண்ட 10 மோட்டார் பம்புகளும், பழைய நாப்பாளையம், புதிய நாப்பாளையம் பெருமாள் கோயில், துளசி நகர், டி.என்.எச்.பி., காந்தி நகர், கன்னியம்மன்பேட்டை, கதகுழி, அரியலூர், அன்பு வளர்மதி நகர், கலைஞர் நகர், நெடுஞ்செழியன் நகர், நேருஜி நகர், காமராஜ் நகர், காமராஜர் சாலை, புதிய புவனேஷ்வரி நகர், தாமரைக் குளம் தெரு, ஏ.பி.ஜே.அப்துல் கலாம் நகர், மகாத்மா காந்தி தெரு உள்ளிட்ட 21 இடங்களில் டிராக்டர் மூலம் பொருத்தப்பட்ட 25 எச்.பி. திறன் கொண்ட மோட்டார் பம்புகளும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

**பின்னர் செய்தியாளர் சந்திப்பில் மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தெரிவித்ததாவது :**

சென்னையின் மாநகரப் பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக விட்டுவிட்டு கனமழையும் அதிகனமழையும் பெய்துள்ளது. தற்பொழுது வானிலை ஆய்வு மையத்தின் மூலம் நாளை முதல் தினமும் கனமழை வருவதற்கு வாய்ப்புண்டு என்ற அறிக்கை வந்துள்ளது. அந்த அறிக்கையின் வாயிலாக சென்னை மாநகரப் பகுதியில் பல்வேறு மண்டலங்களில் நடக்கும் முன்னெச்சரிக்கைப் பணிகள் இன்று ஆய்வு செய்யப்பட்டது.

குறிப்பாக, மணலி மண்டலத்தில் தாழ்வான பகுதிகள் நிறைய உள்ளன. இந்த மண்டலத்தில் கிட்டத்தட்ட 17 பகுதிகள் நீர்தேங்கும் தாழ்வான பகுதிகள் எனக் கண்டறியப்பட்டு, அந்தப் பகுதிகள் ஆய்வு செய்யப்படுகிறது.

இந்த ஆமுல்லவாயல் பாலமானது புழல் உபரிநீர் அருகே அமைந்துள்ள ஒரு பாலம். முந்தைய காலகட்டங்களிலே பெரிய வெள்ளம் வரும்பொழுது இந்த பாலம் முழுமையாக மூழ்கிய சூழ்நிலைகள் இருந்திருக்கிறது. இந்த வருடம் அதுபோல் நடக்காமல் இருக்க இதற்கு அருகாமையில் அமைந்துள்ள தாழ்வான பகுதியில் குறிப்பாக பாலசுப்பிரமணியன் நகர், பர்மா நகர், இருளர் காலனி போன்ற அனைத்துப் பகுதிகளை எப்படி கண்காணிக்கலாம், எப்படி அங்குள்ள பொதுமக்களை வெள்ளப் பாதிப்பிலிருந்து தடுக்கலாம் என்ற நோக்கத்திலே இந்த ஏற்பாடுகளை செய்யப்படுகிறது.

வழக்கமாக ஒரு கட்டுப்பாட்டு அறை ரிப்பன் மாளிகையில் மட்டும்தான் அமைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்து தகவல்கள் பெறப்பட்டு மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தற்போது ரிப்பன் மாளிகையில் உள்ள கட்டுப்பாட்டு அறையில் இருக்கிற

தகவல்கள் மற்றும் தரவுகள் போன்று ஒவ்வொரு மண்டலத்திலும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், மழைநீர் தேங்கும் தாழ்வான பகுதிகளில் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட்டு, அந்தத் தாழ்வான பகுதி எப்படி இருக்கின்றது, மக்கள் நிலை மற்றும் தண்ணீர் தேங்குகின்றதா என்பது குறித்து நிகழ்நேரமாக இந்த கட்டுப்பாட்டு அறையில் இருந்து கண்காணிக்க முடியும்.

அதுமட்டுமில்லாமல் ஒவ்வொரு மண்டலத்திலும் இரண்டு ட்ரோன்கள் ஏற்பாடு செய்து, அந்த ட்ரோன் மூலமாக வாகனங்கள் உள்ளே போக முடியாத பகுதிகள், வாகனத்தால் உடனே செல்ல முடியாத பகுதிகளில் ட்ரோன் மூலமாக அணுகி, கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்று அது ஆய்வு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, பாலசுப்பிரமணியன் நகரில் தற்போதைய நிலவரம் என்ன என்பதை ட்ரோன் மூலமாக இந்த கட்டுப்பாட்டு அறையில் கண்காணித்தோம்.

இதுமட்டுமில்லாமல் நீர்வளத்துறையுடன் இணைத்து பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த புழல் உபரிநீரினால் அதிகமான வெள்ளப்பெருக்கு ஏற்படாமலும், மக்களுக்கு பாதிப்பு ஏற்படாமலும் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இன்றைக்கு காலையில் ஐ.எம்.டி.யோட டைரக்டர் திரு. துரை அவர்களின் ஆன்லைன் மீட்டிங்கில் கொடுத்த அறிவுரையின் வாயிலாக, தென்கிழக்கு வங்கக்கடலில் உருவான அந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்னொரு 48 மணி நேரத்தில் ஒரு புயலாக உருவாகிவிடும் என்ற ஒரு கணிப்பு உண்டு. அந்தப் புயல் வடக்கு ஆந்திரா அல்லது தெற்கு ஒடிசாவில் நகரும் என்று ஒரு கணிப்பு உள்ளது. சென்னைக்கும், சென்னையில் அருகில் இருக்கிற நகரங்களுக்கும் பிரச்சனைகள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இருப்பினும் இந்த புயல் மட்டுமல்ல அரபிக் கடலிலும் தென்குமரி பகுதியிலும் ஒரு சிஸ்டம் உருவாகியிருக்கு. தென்குமரி பகுதியில் இருக்கிற ஒரு அழுத்தம் வந்து தரையைக் கடந்து இன்னும் 48 மணி நேரத்துக்குள் நம்ம வட மாவட்டங்களை நெருங்கிப் போகும் பொழுது சென்னைக்கும் இன்னொரு 24 மணி முதல் 48 மணி நேரம் வரை கனமழை இருக்கும் என்று சொல்லப்படுகிறது. இவற்றை ஒருங்கிணைந்து தான் தற்பாது மாநகராட்சியின் சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதுமட்டுமில்லாமல் இந்தக் கட்டுப்பாட்டு அறைக்கு கீழ் ஒரு சமையல் கூடமும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலத்திலும் தனித்தனியாக சமையலறைகள், மைய சமையலறைகள் மற்றும் 220 நிவாரண முகாம்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த மணலி மண்டலத்தில் 17 நிவாரண முகாம்கள், மீட்பு பணிகளுக்காக அனைத்து இயந்திரங்கள் மற்றும் வாகனங்களும் தயார்நிலையில் உள்ளது.

மேலும், தண்ணீர் தேங்கி இருக்கிற இடங்களில் கொசு உற்பத்தியாவதற்கு வாய்ப்புள்ள காரணத்தினால், 3,700 களப்பணியாளர்கள் மூலம் கொசுப்புகை மருந்து அடித்தல் மற்றும் கொசுக்கொல்லி மருந்து தெளிக்கும் பணியும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த பருவமழையினை எதிர்கொள்ள அனைத்துத் துறைகளுடனும் ஒருங்கிணைந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக சென்னையில் மட்டும் கண்காணிப்புப் பணிகள் செய்தால் போதாது, சென்னையின் புறநகர் பகுதிகளில் இருக்கின்ற பூண்டி, புழல், சோழாவரம், கேசவபுரம், தேர்வாய் கண்டிகை போன்ற அனைத்து நீர்நிலைகளையும் கண்காணித்து நிகழ்நேரமாக கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனத் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மண்டல அலுவலர் திரு.பி.அரவிந்தன், செயற்பொறியாளர் திரு.தேவேந்திரன், நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் திரு.சரவணகுமார் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**